மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

மேம்பாலம்

***3600—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதி, கெருகம்பாக்கம்–கவுல்பஜார் இடையே அடையாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலந்தூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சி, அடையாறு ஆற்றின் குறுக்கே 8 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓர் உயர்மட்டப் பாலம் மற்றும் இதர பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கடந்த 2016 ஆம் ஆண்டு போடப்பட்டது. இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட கெருகம்பாக்கம்–கவுல்பஜார் இடையே அடையாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுகின்ற பணி 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தப் பணியானது இப்போது 60 சதவிகிதம் முடிவுற்றிருக்கின்றது. அந்தப் பணியை வருகின்ற மழைக் காலத்திற்குள் விரைவாக முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கவுல்பஜாரிலிருந்து வெளியில் செல்லும் ஒன்றியச் சாலை மிகவும் பாழ்பட்ட நிலையில்

இருக்கின்றது. அந்தச் சாலையையும் மழைக் காலத்திற்கு முன்பாக அமைத்து விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கெருகம்பாக்கம் கிராம ஊராட்சியில், அடையாறு ஆற்றின் குறுக்கே 5 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 172.84 மீட்டர் நீளமுள்ள உயர்மட்டப் பாலம் NABARD திட்டத்தின்கீழ் அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உத்தரவின் பெயரில் 14–06–2018–ல் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட உயர்மட்டப் பாலத்திற்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகள் 77 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், பாலத்திற்கான தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் 2 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகின்றன. இந்த உயர்மட்டப் பாலம், இருபுறத் தடுப்புச் சுவர் மற்றும் இணைப்புச் சாலை ஆகியன அமைப்பதற்கான பணிகள் NABARD திட்டம் மற்றும் மாநில நிதி ஆதாரங்கள்மூலம் மொத்தம் 8 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்தப் பாலப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இருபுற தடுப்புச் சுவர் மற்றும் இணைப்புச் சாலைப் பணிகள் அனைத்தும் 30–11–2019–க்குள் முழுமையாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்த ஒன்றியச் சாலைகள் குறித்து துறை அதிகாரிகள்மூலம் முழுமையாக ஆய்வு செய்து, அவசியம் இருப்பின், கண்டிப்பாகச் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய அவையில் பேசி, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கின்றார். இன்றைக்கு சென்னை புறநகர்ப் பகுதிகளில் இருக்கின்ற பல ஊராட்சிகளில் போதிய நிதி ஆதாரம், வருவாய் இல்லை. அதாவது, மின் இணைப்பிற்குக்கூட பணம் கட்ட முடியாமல், அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமல் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த ஊராட்சிகளில் பார்த்தீர்களென்று சொன்னால், தெருக்கள் இன்னும் போடப்படாமல் இருக்கின்றன. 20 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட அந்தச் சாலைகள் எல்லாம் இன்றைக்குப் பாழ்பட்டிருக்கின்றன. 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு சிமென்ட் சாலை போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்தச் சிமென்ட் சாலைகளில், கற்கள் எல்லாம் பெயர்ந்துள்ள நிலையில் நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சென்னை புறநகர்ப் பகுதிகளில் இருக்கிற அந்த ஊராட்சிகளிலெல்லாம் ஆய்வு செய்து, அந்தச் சாலைகளை எல்லாம் போடுவதற்கு இந்த அரசு ஆவன செய்திட வேண்டும்.*

அதோடு மட்டுமல்லாமல், சென்னை புறநகர்ப் பகுதியிலே, மக்கள் தொகை அதிகரித்துள்ளதன் காரணமாக, குப்பைகள் அதிகமாக சேருகின்றன. 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த எண்ணிக்கையில்தான் பணியாளர்கள் இன்றும் இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய வாகனங்கள் போதிய அளவில் இல்லை. ஆகவே, இந்த அரசு தயவு செய்து அந்த ஊராட்சிகளிலெல்லாம் ஆய்வு செய்து, போதிய வண்டி வாகனங்களை வழங்கி, தேவையான பணியாளர்களை நியமனம் செய்து, குப்பை பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும். அதேபோன்று, அந்தச் சாலைகள் எல்லாம் சீரமைக்கப்பட வேண்டும் என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜூலை 17]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மூலக் கேள்வியான பாலத்திலிருந்து, அடுத்த* subject*–க்குச் சென்றிருக்கிறார். இருந்தாலும்கூட, அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார். இன்றைக்கு ஊராட்சிகளில் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கிறது என்பது போன்ற சூழ்நிலைகள் இல்லை. இருந்தாலும்கூட, அவசியத்தைக் கருதி தேவையான நிதியை ஒதுக்கியிருக்கிறோம். அதேபோல, கிராமச் சாலைகளைப் பொறுத்தளவில், இதற்குமுன்பு மொத்தமாக சுமார் 1,02,000 கிராமச் சாலைகள்தான் இருந்தன. நாங்கள் 47,000 ஊராட்சி சாலைகளைக் கூடுதலாகச் சேர்த்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறுகலான ஒரு கிலோ மீட்டருக்குள் இருக்கும் சின்ன சாலைகளைப்பற்றிச் சொல்கிறார் என்று நினைக்கிறேன். அந்தச் சாலைகளுக்குக்கூட கடந்த முறை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உத்தரவின்பேரில் 200 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். இந்தத் தடவையும் கூடுதலாக எடுக்கப்படவுள்ளது. அவர் சொல்வது போன்ற ஊராட்சி சாலைகளில் ஒரு கிலோ மீட்டருக்குள் இருக்கும் சாலைகள்தான் இன்னும் எடுக்கப்படாமல் உள்ளன. அதில் கொஞ்சம் சிரமம் இருந்தது. அதையும்கூட நாங்கள் எடுத்திருக்கிறோம். இந்த முறையும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சாலைகளும் கண்டிப்பாக எடுக்கப்படும்.*

அதைப்போல, திடக் கழிவு மேலாண்மையைப் பொறுத்தளவில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதிக கவனம் மேற்கொண்டு வருகிறது. அது மிகப் பெரிய சவாலான ஒரு பிரச்சினை என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பேரூராட்சி, நகராட்சி, ஊராட்சி, மாநகராட்சிப் பகுதிகள் எல்லாவற்றையும் சேர்த்தால், ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 19,000 டன்னுக்குமேல் குப்பை சேகரிக்கப்படுகிறது. இது பெரிய சவாலான பணி. இருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைக்கு அதிகமான நிதியினை ஊராட்சிகளுக்கு ஒதுக்கி, தேவையான உபகரணங்களை வாங்கியிருக்கிறது. எந்தப் பகுதியிலாவது அதுபோன்ற பிரச்சினை இருந்தால், அதனை ஆய்வு செய்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பாலமூர் ஊராட்சி முற்றிலுமாக ஒரு மலைக் கிராமம். அதற்குச் செல்கின்ற சாலை, தடிக்காரன்கோணம், பாலமூர் வழியாக மாறாமலை வரை செல்கின்ற சாலையாகும். அந்தச் சாலையின் இடையிலே ஒரு சப்பாத்து பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் பழுதடைந்துள்ள நிலையில், ஒகி புயலில் மீண்டும் அதிக அளவில் பழுதடைந்துள்ளது. அந்தச் சாலை முழுவதுமாக பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், தடிக்காரன்கோணம் முதல் பாலமூர், மாறாமலை செல்கின்ற சாலையில், வழியில் இருக்கக்கூடிய சப்பாத்து பாலத்தை மாற்றி, சிறு பாலமாக அமைத்து, அந்தச் சாலையைச் செப்பனிட்டுத் தர மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்மநாபபுரம் தொகுதியில், மலைவாழ் மக்கள் வாழ்கின்ற அந்தச் சாலை குறித்து தெரிவித்தபோது, அந்தப் பாலம் அவசியமாகத் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல, ஒகி புயலில்கூட அது பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு இதுகுறித்து எடுத்துச்சென்று, துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, அவசியம் இருப்பின், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*